5) வெப் பநிலைப்பி

6) மேல் மூடி

7) காப்பிடப்பட்ட கைபிடி

பிரித்தல்

1) பிரிக்கும் முன் நீர் சேமிப்பு தொட்டியில் நீர் இல்லை என்பதை உறுதி செய்யவும்.

2) மின்தேய்ப்பு பெட்டியின் மறையாணிகளை கழற்றவும்.

3) மேல்மூடியையும், கைப்பிடியையும் அகற்றவும்.

4) அடிதட்டிலிருந்து கல்நார் அட்டையை எடுக்கவும்.

சோதனைகள்

வெப்ப மின் இழை தொடர் சோதனை விளக்கின் மூலம் சோதனை செய்யப்பட வேண்டும். இரண்டு பித்தளை மின் முனைகள் தொடர் சோதனை விளக்கின் வழியாக மின் இணைப்பு வழங்க வேண்டும். மின விளக்கு ஒளிரும் அறிகுறியை கொண்டு மின் வெப்ப இழையில் மின் தொடர்ச்சி உள்ளது என்று அறியலாம்.

மீண்டும் இணைத்தல்

1) நீராவி பாதைகளில் அழுக்கு படிந்திருந்தால் ஹைட்ரோ குளோரிக் அமிலத்தை பயன்படுத்தி நீக்க வேண்டும்.

2) அடித்தட்டின் மரையாணிகளை நன்கு முடுக்க வேண்டும்.

3) வெப் பமின் இழை மற்றும் மற்ற பாகங்களை அடித்தட்டின் மீது அடுக்கி முடுக்க வேண்டும்.

4) அழுத்த தட்டு வெப்ப மின் இழையின் மீது வைத்து முடுக்கப்பட வேண்டும்.

5) இறுதியாக மேல்மூடியை பொருத்த வேண்டும்.

இணைத்தபின் சோதித்தல்

திறந்த சுற்று, குறைசுற்று, நில இணைப்பு பழுதுகளை தொடர் சோதனை விளக்கின்மூலம் சோதிக்கவும். பழுது கண்டறியப்பட்டால் பழுது நீக்கி பயன்படுத்தும் நிலையில் இணைக்க வேண்டும். நில இணைப்பு பழுது கண்டறியப்பட்டால் பிரித்து மின்காப்பை சோதிக்க வேண்டும். வெப்ப மின்னிழை பயன்படுத்த தகுதியற்று இருந்தால் புதிய வெப்ப மின்னிழை மாற்ற வேண்டும். சிறு பழுதுகள் நீக்கப்பட வேண்டும்.

முன்னெச்சரிக்கை

1) மரையாணிகளை கழற்றும்போதும் முடுக்கும் போதும் தேவையற்ற அழுத்தம் கொடுக்க கூடாது.

2) அழுத்த தட்டை பொருத்தும் போது சமமான அழுத்தம் கொடுக் கவேண்டும்.

3) பாகங்கள் ஒன்றன்பின் ஒன்றாக முறைபடி கழற்றியும், கழற்றப்பட்ட மரையாணிகள் மற்றும் திருகுகள் ஒரு பாதுகாப்பான பாத்திரத்தில் வைக்க வேண்டும்.


போர்சிலின்
கட்டை
மின்முனை
சீராக்கும் மறை
வெப்பநிலைப்பியின்
மின் தொடுமுனை
வெப்ப மின்இழையின்
மின் இணைப்பு
வெப்ப மின்இழை


பேக்கலைட் கைப்பிடி
வெப்பநிலை தேர்வுத் திருகி
வெப்ப மின்இழை

2. தானியங்கி மின்தேய்ப்பு பெட்டி

நோக்கம்

கொடுக்கப்பட்டுள்ள தானியங்கி மின்தேய்ப்பு பெட்டியை
(i) பிரித்தல்
(ii) சோதனை செய்தல்
(iii) மீண்டும் இணைத்தல்.

தொடர்புடைய தகவல்கள்

வீடுகளில் அதிகம் பயன்படுத்தும் சாதனங்களில் சாதாரண மின்தேய்ப்பு பெட்டியும் ஒன்றாகும். அச்சாதனைத்தைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ள வேண்டியது மாணவர்களுக்கு அவசியமாகும். மின்தேய்ப்பு பெட்டி மின் வெப்ப விளைவின் அடிப்படையில் இயங்கும் மின்சாதனம் ஆகும். ஒரு கடத்தியின் வழியே மின்னோட்டம் செல்லும்பொழுது வெப்பம் உண்டாகிறது. மின்தடை குறைவாக இருப்பின் மின்னோட்டம் அதிகரிக்கும். வெப்ப விளையும் அதிகரிக்கும்.

தேவைப்படும் கைக்கருவிகள்

1.	மின்காப்பு உறையிடப்பட்ட குறடு	–	1
2.	திருகி 20 செ.மீ. & 10 செ.மீ.	–	1
3.	ஸ்பானர் செட்	–	1
4.	சோதனை விளக்கு	–	1

தேவையான உபகரணம்

1.	தானியங்கி மின்தேய்ப்பு பெட்டி	–	1

செய்முறை

சாதாரண மின்தேய்ப்பு பெட்டியின் பாகங்கள்
(i) அடித்தகடு
(ii) கீழ் மைக்கா
(iii) வெப்ப மின்னிழை
(iv) மேல் மைக்கா
(v) கல்நார் அட்டை
(vi) அழுத்தத் தகடு
(vii) ஈருலோகபட்டை
(vi) மேல்மூடி
(vii) மின்இணைப்பு முனைகள்
(viii) மின்காப்பு கைப்பிடி
(ix) அறிகுறி விளக்கு

பிரித்தல்

மின்தேய்ப்பு பெட்டியின் திருகுகளை கழற்றவும்
ஈருலோக பட்டையை தனியே எடுக்கவும்.
அத்தத் தகட்டை தனியே எடுக்கவும்.
வரிசையாக அடித்தகட்டிலிருந்து கல்நார் அட்டை மைக்கா அட்டைகளை நீக்கி வெப்பமின்னிழையை வெளியில் எடுக்கவும்.





திறந்த மற்றும்
குறைச்சுற்று சோதனை



	திறந்த சுற்று	குறுக்குச் சுற்று	நில இணைப்பு பழுது
சோதனை விளக்கு	பிரகாசமாக எரிதல்/ எரியாமை	பிரகாசம்/ மங்கல்	பிரகாசமாக எரிதல்/ எரியாமை
பழுது	பழுது / இல்லை	பழுது / இல்லை	பழுது / இல்லை

சோதனை

வெப்ப மின்னிழையை சோதனை விளக்கின் மூலம் சோதனை செய்ய வேண்டும்.

வெப்ப மின்னிழையின் இரண்டு தாமிர மின்முனை தகட்டில் சோதனை விளக்கின் முனையை இணைக்கவும்.

சோதனை விளக்கு மங்கலாக எரிந்தால் வெப்ப மின்னிழை நல்ல நிலையில் உள்ளது எனவும், பிரகாசமாக எரிந்தால் குறைசுற்ற எனவும் அறிந்து கொள்ளலாம்.

மீண்டும் இணைத்தல்

அடித்தகட்டில் திருகுகள் இறுக்கமாக முதலில் திருக வேண்டும்.
அடித்தகட்டின் மேல் மைக்கா அட்டை, வெப்ப மின்னிழை, கல்நார் அட்டை ஆகியவற்றை அடுக்கவும்.
அழுத்தத் தகட்டை மேலே பொருத்தி திருககளை சரியான முறையில் பொருத்தவும்.
ஈருலோகப் பட்டையை பொருத்தவும்.
மின் இணைப்பு தொகுதியை சரியாக இணைக்கவும்.

இணைத்தப்பின் செய்ய வேண்டிய சோதனைகள்

சோதனை விளக்கைக் கொண்டு குறுக்குச் சுற்று, திறந்த சுற்று, தரையிடல் சோதனை ஆகியவை மேற்கொள்ளவும், சரியாக உள்ளது என அறிந்து சாதனத்தை பயன்படுத்தவும். ஏதேனும் பழுது கண்டறியப்பட்டால் மீண்டும் பிரித்து சரி செய்யவும் , வெப்ப மின்னிழை சரி இல்லை எனில் மாற்றவும், மின்னிழையில் சிறு பழுது இருப்பின் சரி செய்யலாம்.

எச்சரிக்கைகள்

(i) திருகுகளை கழற்றும்பொழுதும் பொருத்தும் பொழுதும் தேவையான அழுத்தத்தை மட்டும் உபயோகிக்கவும்.
(ii) அழுத்தத் தகடை சம அழுத்தத்தில் பொருத்தவும்.
(iii) திருகுகளை தட்டுகளை கழற்றும்பொழுது முறையாகவும், பத்திரமாகவும் கையாளவும்.

பயன்கள்

துவைத்த துணிகளை மடிப்புடன் சுருக்கம் இன்றி பயன்படுத்த சாதாரண மின்தேய்ப்பு பெட்டி உதவுகிறது.



திறந்த மற்றும் குறைச்சுற்று சோதனை



நில இணைப்புச் சோதனை



	திறந்த சுற்று	குறுக்குச் சுற்று	நில இணைப்பு பழுது
சோதனை விளக்கு	பிரகாசமாக எரிதல்/ எரியாமை	பிரகாசம்/ மங்கல்	பிரகாசமாக எரிதல்/ எரியாமை
பழுது	பழுது / இல்லை	பழுது / இல்லை	பழுது / இல்லை

3. மின்சார அடுப்பு

நோக்கம்

(i) கொடுக்கப்பட்டுள்ள மின்சார அடுப்பை பிரித்து பாகங்களை அறிதல்.
(ii) சோதனைகளை மேற்கொண்டு பழுதுகளை அறிந்து நிவர்த்தி செய்தல்.

தொடர்புடைய தகவல்கள்

அனைத்து வகை பாத்திரங்களை கொண்டு சமையல் வேலை செய்யக்கூடிய மின் வெப்ப சாதனம் ஆகும். இதில் மின்வெப்ப இழை கண்ணுக்கு தெரியும் வகையில் திறந்த நிலையில் அமைக்கப்பட்டு மேல்புறம் பாதுகாப்பு கம்பிவலை பொருத்தப்பட்டுள்ளது. நில இணைப்பு செய்யப்பட்டிருக்கும்.

தேவைப்படும் கை கருவிகள்

1. மின்காப்பு உறையிடப்பட்ட குறடு – 1
2. திருகி 20 செ.மீ. 10 செ.மீ. – 1
3. ஸ்பானர் செட் – 1
4. சோதனை விளக்கு – 1

தேவையான உபகரணம்

(i) மின்சார அடுப்பு – 1

பிரித்தல்

(ii) அடிப்புறம் உள்ள மூடியை திருகை சுழற்றி வெளியே எடுக்கவும்.
(iii) மின்னிணைப்பு தொகுதியிலிருந்து திருகின் உதவியால் மின்னிணைப்பு துண்டிக்க வேண்டும்.
(iv) அடிப்புறம் உள்ள திருகுகளைதிருகி வெப்ப மின்னிழை பொருத்தப்பட்டுள்ள போர்சோலின் தட்டு வெளியே எடுக்கவும்.

சோதனை

(i) கண்களால் பார்த்தே வெப்பமின்னிழையை துண்டிக்கப் பட்டுள்ளதா என கண்டறியலாம்.
(ii) மின் வெப்பயிழையில் துண்டுள்ள இடத்தை இணைத்து பயன்படுத்தலாம்.
(iii) மின்னினைப்பு தொகுதியுடன் மின்னிணைப்பு கொடுக்கவும்.
(iv) அடிமூடியை பொருத்தவும்.
(v) மீண்டும் இணைத்த பின் கறுக்குச் சுற்று, திறந்தச் சுற்று, தரையிடை சோதனை இல்லை என அறிந் கொள்ளலாம்.

எச்சரிக்கை

மின்னிணைப்பு தொகுதிக்கு மின்னிணைப்பு செய்யும் பொழுது தரையிணைப்பு சரியாக செய்யப்பட வேண்டும்.



மின்வெப்பத்தட்டு







	திறந்த சுற்று	குறுக்குச் சுற்று	நில இணைப்பு பழுது
சோதனை விளக்கு	பிரகாசமாக எரிதல்/ எரியாமை	பிரகாசம்/ மங்கல்	பிரகாசமாக எரிதல்/ எரியாமை
பழுது	பழுது / இல்லை	பழுது / இல்லை	பழுது / இல்லை

4. மின் தகட்டு அடுப்பு

நோக்கம்

கொடுக்கப்பட்டுள்ள சாதனத்தில் பிரித்து பாகங்களை அறிந்து மீண்டும் இணைத்தல். சாதனத்தை சோதனை செய்து பழுதுகளை கண்டறிந்து நீக்குதல்.

தொடர்புடைய தகவல்கள் (மின்சார தகட்டு அடுப்பு)

மின் தகட்டடுப்பானது சமையல் வேலை செய்வதற்கு உதவும் ஒரு மின் உபகரணமாகும். மின்சார அடுப்பை காட்டிலும் பாதுகாப்பானது. நீண்டகாலம் உழைக்க கூடியது. உலோக வட்ட தகட்டின் உட்புறம் நன்கு மின்காப்பு செய்யப்பட்டு வெப்ப மின்னிழை பொருத்தப்பட்டுள்ளது. தரையிணைப்புடன் கூடிய மின்னிணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. தரமான கடத்திகள் மூலம் மின்னிணைப்பு கொடுக்கப்பட்டிருக்கும் இந்த அமைப்பானது அடிப்பகுதியில் மூடப்பட்டிருக்கும் இரு வெப்ப மின்னிலை அமைக்கப்பட்டுள்ள தகட்டடுப்புகளில் குறைந்த அளவு நடுத்தர வெப்பம், அதிக வெப்பம் கிடைக்குமாறு கட்டுபடுத்தும் மின்சாவி பொருத்தப்பட்டிருக்கும். இந்த மின்சாதனம் 220 V மின்னழுத்தத்தில் 500 W 1000 W, 1500 W மின்திறன்களில் பயன்படுத்தப்படுகின்றது. மின் வெப்ப விளைவு அடிப்படையில் இவை இயங்குகின்றது.

தேவைப்படும் கை கருவிகள்

1.	மின்காப்பு உறையிடப்பட்ட குறடு	–	1
2.	திருகி 20 செ.மீ 10 செ.மீ.	–	1
3.	ஸ்பானர் செட்	–	1
4.	சோதனை விளக்கு	–	1

தேவையான உபகரணம்

1. மின்சார தகட்டடுப்பு – 1

பிரித்தல்

(i) தகட்டடுப்பின் அடிப்புறத்தில் உள்ள திருகை கழற்றி கீழ்மூடியை அகற்றவும்.
(ii) உட்புறம் உள் ளதகட்டை சுழற்றி வட்ட வடிவ உலோக உறையை தனியே எடுக்கவும்.
(iii) மின்னிணைப்பை பாதுகாப்பாக கழற்றி வெப்பமின் இழை தொகுதியில் உள்ள உலோக பகுதியை தனியே எடுக்கவும்.

சோதனை

(i) சோதனை விளக்கோடு தகட்டடுப்பின் மின்முனைகளை இணைத்து தொடர்ச்சி சோதனை செய்யவம்.
(ii) விளக்கு பிரகாசமாக எரிந்தால் குறுக்கு சுற்று பழுது உள்ளது என அறிந்து அப்பகுதி முழுவதும் மாற்ற வேண்டும்.
(iii) விளக்கு எரியவில்லை என்றால் திறந்த சுற்றுப் பழுது உள்ளது என அறிந்து அப்பகுதி முழுவதையும் மாற்ற வேண்டும்.
(iv) விளக்கு மங்கலாக எரிந்தால் நல்ல நிலையில் உள்ளது என அறிந்து கொள்ளலாம்.

இணைத்தல்

(i) வெப்ப மின்னிழை உள்ள உலோக தகட்டை உரிய இடத்தில் அமைத்து அடிபுறம் திருகை திருகி இருக்கமாக பொருத்தவும்.
(ii) அடிபுறம் மூடியை பொருத்தும்போது தக்க மின்காப்புடன் மின்னிணைப்பு தொகுதியுடன் மின்னிணைப்பு கொடுக்க வேண்டும்.
(iii) அடிப்பக்க மூடியை பொருத்தவும்.
(iv) சோதனை விளக்கை கொண்டு குறுக்கு சுற்று, திறந்த சுற்று, தரையிடை பழுது இல்லை என அறிந்து கொள்ளலாம்.

எச்சரிக்கை

(i) பிரித்தல் வேலையை மேற்கொள்ளும் முன் மின்னிணைப்பிலிருந்து சாதனம் துண்டிக்கப்பட்டுள்ளதா என உறுதி செய்து கொள்ள வேண்டும்.



பள்ளம்
கம்பி வலை
செயல்படும் திருகி
மின் துண்டிப்பு நிலை
மின் இணைப்பு நிலை
நேரக்கட்டுப்பாட்டு கருவி

5. மின்சார ரொட்டி வாட்டுவி

நோக்கம்

(i) மின்சார ரொட்டி வாட்டுயை பிரித்தல் மீண்டும் இணைத்தல்.
(ii) சாதனத்தை சோதித்து பழுதுகளை அறிந்து அதனை நீக்கல்

தொடர்புடைய தகவல்கள்

மின்சார வாட்டுவி மின் வெப்ப விளைவின் இயங்கும் ஒரு மின்சாதனம். இவை 200 V முதல் 250 V மின்திறனில் இயங்குபவை.

இவை ரொட்டியினை சுடுவதற்கு பயன்படுகிறது. இதனுள் மைக்கா அட்டையின்மீது சுற்றபட்ட வெப்பமின்னிழை தொகுதி பயன்படுத்தப்படுகின்றது. மின்சார வாட்டுவி இருவகைபடும். (i) சாதாரண மின் வாட்டுவி (ii) தானியங்கி மின் வாட்டுவி (Pop Up Toaster)

தேவைப்படும் கை கருவிகள்

1. மின்காப்பு உறையிடப்பட்ட குறடு	– 1
2. திருகி 20 செ.மீ 10 செ.மீ	– 1
3. ஸ்பானர் செட்	– 1
4. சோதனை விளக்கு	– 1

தேவைப்படும் உபகரணங்கள்

மின்சார ரொட்டி வாட்டுவி 200 W 230 V

மின்வாட்டுவின் பாகங்கள்

(i) உலோக அமைப்பு (ii) ரொட்டி வைக்கும் பள்ளங்கள்
(iii) நெம்புகோள் அமைப்பு (iv) நேர கட்டுபாட்டு சாவி
(V) வெப்ப மின் இழை.

பிரித்தல்

(i) உலோக மேல்மூடியை சாதனத்திற்கு மின்இணைப்பிற்கு மின்னிணைப்பை துண்டித்தவுடன் கழற்றவும்.
(ii) மின்னிணைப்பு தொகுதியிலிருந்து வெப்ப மின்னிழை பிரிவுகளை தனித்தனியே எடுக்கவும்.
(iii) தேவைப்பட்டால் நெம்புகோலை தனியே கழற்றவும். நெம்புகோலை பிரித்து எடுப்பதில் முடிந்தவரை தவிர்க்கவும்.
(iv) நேர கட்டுபாட்டு சாவியை நன்கு கவனத்தில் கொள்ளவும். பொதுவாக இவை பிரிப்பதில்லை.

சோதனை

(i) சோதனை செய்ய வேண்டிய முனைகளை வெப்ப மின்னிழையுடன் இணைத்து சோதிக்கவும். விளக்கு மங்கலாக எரிந்தால் நல்லநிலையில் உள்ளது எனவும், விளக்கு எரியவில்லை எனில் திறந்த சுற்று உள்ளது எனவும், விளக்கு பிரகாசமாக எரிந்தால் குறுக்கு சுற்று பழுது உள்ளது எனவும் அறியலாம்.

(iv) திறந்த சுற்று பழுது ஏற்பட்டிருந்தால் வெப்ப மின்னிழையின் விடுபட்டுள்ள இடத்தை அறிந்து அவற்றை இணைக்கவும். குறுக்கு சுற்று இருந்தால் அந்த இடத்தை கண்டறிந்து சரிசெய்யவும்.

திறந்த மற்றும் குறைச்சுற்று சோதனை



நில இணைப்புச் சோதனை





	திறந்த சுற்று	குறுக்குச் சுற்று	நில இணைப்பு பழுது
சோதனை விளக்கு	பிரகாசமாக எரிதல்/ எரியாமை	பிரகாசம்/ மங்கல்	பிரகாசமாக எரிதல்/ எரியாமை
பழுது	பழுது / இல்லை	பழுது / இல்லை	பழுது / இல்லை

இணைத்தல்

(i) வெப்பமின்னிழையை உரிய இடத்தில் பொருத்தி தக்க மின்காப்பு இட்டு இணைக்கவும்.

(ii) நெம்புகோல் அமைப்பை உரிய முறையில் பொருத்தவும்.

(iii) மேல்மூடியை திருகுகள் மூலம் அசையாமல் பொருத்தவும்.

(iv) நேர கட்டுப்பாட்டு சாவியை பிரித்திருந்தால் அதனை உரிய முறையில் மீண்டும் பொருத்தவும்.

(v) பொருத்தியின் திறந்த சுற்று, குறுக்கு சுற்று, தரையிடல் சோதனை ஆகியவற்றை நல்ல நிலையில் உள்ளது என உறுதி செய்து கொள்ள வேண்டும்.

பயன்கள்

(i) வீடுகளில் அதிகம் பயன்படுத்தும் மின்சாதனங்களில், மின்சார வாட்டுவியியும் ஒன்றாகும். ரொட்டிகளை விரைவாக சுடுவதற்கு பயன்படுகின்றது. இச்சாதனம் மிக குறைந்த பராமரிப்பு தேவைப்படும் ஒரு மின்சாதனமாகும்.

6. மின் நீர் சூடேற்றி குவளை (துட்டை வகை)

நோக்கம்

(i) மின் சூடேற்றும் கலனில் பாகங்களை அறிதல்.
(ii) இதனை பிரித்து மீண்டும் இணைக்கும் முறையை அறிதல்.
(iii) சோதனை செய்து பழுதுகளை அறிந்து நீக்குதல்.

தொடர்புடைய தகவல்கள்

(i) மின்சார நீர் சூடேற்றும் கலனானது சிறிய அளவில் வெந்நீர் தயாரிக்க உதவும் ஒரு மின் சாதனமாகும். இவை இரு வகைகளில் உள்ளது.
(i) தட்டை வகை (Saucer Pan Type)
(i) வளைய வகை (Ring Type)

வளைய வகை நீர் சூடேற்றும் கலனில் உலோக உறைக்குள் அடைக்கப்பட்ட வெப்ப மின்னிழை பயன்படுத்தப்படுகின்றது. உலோக பாத்திரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தண்ணீர் கசிவு இல்லாமல் இருக்க ரப்பர் உறை இடப்பட்டுள்ளது.

தட்டை வகை நீர் சூடேற்றும் கலனில் வட்ட வடிவ வெப்ப மின்னிழை மின் இஸ்திரி பெட்டியில் அமைக்கப்பட்டுள்ளது போல் உள்ளது. இந்த சாதனத்தில் மேற்புறம் தண்ணீர் ஊற்றும் பாத்திர பகுதி வெப்ப மின்னிழை உள்ள பகுதி என இரு பிரிவுகளாக உள்ளது.

தேவைப்படும் கைகருவிகள்

1.	மின்காப்பு உறையிடப்பட்ட குறடு	–	1
2.	திருகி 20 செ.மீ. 10 செ.மீ.	–	1
3.	ஸ்பானர் செட்	–	1
4.	சோதனை விளக்கு	–	1

தேவைப்படும் சாதனம்

(i) தட்டை வகை மின் சூடேற்றும் கலன்
(ii) மூழ்கு வகை மின்சார தண்ணீர் சூடேற்றும் கலன் பிரித்தல்.
(iii) அடிப்புறத்தில் உள்ள நட்டை கழற்றி கீழ்புற மூடியை சுழற்றவும்.
(iv) அடிப்புறம் உள்ள அழுத்த தகட்டை நீக்கி கல்நார் அட்டை, மைக்கா அட்டை வெப்ப மின்இழை ஆகியவற்றை தனி தனியாக எடுக்கவும்.

சோதனை

(i) வெப்ப மின்னிழையின் முனைகளுடன் சோதனை விளக்கின் முனைகள் இணைந்து சோதிக்கவும்.
(ii) விளக்கு எரியவில்லை எனில் திறந்த சுற்று பழுது உள்ளது என அறியலாம்.
(iii) விளக்கு மங்கலாக எரிந்தால் நல்ல நிலையில் உள்ளது என அறியலாம்.

மீண்டும் இணைத்தல்

(i) சாதனத்தை தலைகீழாக வைத்து கொள்ளவும்.
(ii) பழைய நிலையில் இருந்ததுபோல் வெப்ப மின்னிழை கல்நார் அட்டை, மைக்கா அட்டை ஆகியவற்றை அமைக்கவும்.
(iii) அழுத்த தகட்டை கல்நார் அட்டையின் மீது வைத்து இறுக்கமாக பொருத்தவும்.
(iv) மின்னிணைப்பு தொகுதியுடன் இணைப்பு கொடுத்தவுடன் கீழ்மூடியை பொருத்தவும்.

சோதனை

மீண்டும் இணைத்தபின் சாதனத்தில் குறுக்கு சுற்று, திறந்த சுற்று, தரையில் சோதனையை மேற்கொண்டு சாதனம் நல்ல நிலையில் உள்ளது என உறுதி செய்து கொள் ளவேண்டும்.







	திறந்த சுற்று	குறுக்குச் சுற்று	நில இணைப்பு பழுது
சோதனை விளக்கு	பிரகாசமாக எரிதல்/ எரியாமை	பிரகாசம்/ மங்கல்	பிரகாசமாக எரிதல்/ எரியாமை
பழுது	பழுது / இல்லை	பழுது / இல்லை	பழுது / இல்லை


காற்றுத்துளை
வெளிக்கூடு
கண்ணாடி இழை
வெப்பநிலைப்பி
வெப்பமின்னிழை
அறிகுறி விளக்கு
வெப்பநிலை
கட்டுப்படுத்தும் திருகி
அடிப்புற மூடி
நீர் வெளியேற்றுக் குழாய்
நீர் உட்செல்லும் குழாய்
நீர் உட்செல்லும் குழாய் வால்வு

7. வெந்நீர் சூடேற்றும் கலன்

நோக்கம்

பழுதடைந்த சூடேற்றும் கலனை பிரித்தல். பழுதுகளை கண்டறிதல் மீண்டும் இணைத்து சூடேற்றும் கலனை இயக்குதல்.

தொடர்புடைய தகவல்கள்

ஒரு சூடேற்றும் கலன் என்பது மின்னாற்றலினால் வெந்நீர் தயாரிக்க பயன்படும் ஒரு உபகரணம். உள் தொட்டியானது நிக்கல் மூலம் பூசப்பட்ட எஃகினால் ஆனது. வெளி தொட்டியானது சிகப்பு ஈயத்தினால் வர்ணம் பூசப்பட்டிருக்கும்.

வெந்நீர் உள்ள உலோக தொட்டியிலிருந்து வெப்ப விரயத்தை குறைக்க உலோக தொட்டியை சுற்றி உலோக மூடி பொருத்தப்பட்டிருக்கும். தொட்டிக்கும் மூடிக்கும் 8 செ.மீ. இடைவெளி விடப்பட்டுள்ளது. இந்த இடைவெளியில் கண்ணாடி இழை நிரப்பப்பட்டுள்ளது. கண்ணாடி இழை உள் தொட்டியிலிருந்து வெப்பம் வெளியேறுவதை தடுக்கும்.

வெப்ப மின் இழை உள்தொட்டியில் பொருத்தப்பட்டிருக்கும். பல்வேறு அளவுகளில் வெப்ப மின் இழை பயன்படுத்தப்படுகிறது. பொதுவாக குழாய் வடிவ வெப்ப மின் இழை பயன்படுத்தப்படுகிறது. இவ்வகையில் வெப் பமின் இழை குழாயின் நடுவில் பொருத்தப்பட்டு சுற்றிலும் மெக்னிசியம் ஆக்சைட் நிரப்பப்பட்டுள்ளது. மெக்னிசியம் ஆக்சைட் மின்காப்பாக செயல்படுவதால் வெப்ப மின்இழை குழாயின் பக்க சுவற்றில் படுவது தவிர்க்கபடுவதுடன் மின்காப்பும் கிடைக்கும் குழாயின் அடிப்பகுதியில் பேக்லைட் முடியானது மின் முனைகளுடன் பொருத்தப்பட்டுள்ளது. ஒரு விபரங்கள் அடங்கிய வரைபடம் கொடுக்கப்பட்டுள்ளது. வெந்நீர் வெளியேறும் குழாயானது சிம்பொனி முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் வெப்ப மின் இழை எப்பொழுதும் நீரில் மூழ்கி இருப்பதை உறுதி செய்யவும், வெந்நீர் அளவு சீராக கிடைப்பதையும் உறுதி செய்கிறது.

வெந்நீர் சூடேற்று கலனில் ஒரு வெப்ப நிலைப்பி உள்ளது. இது தானியங்கியாக நீரின் வெப்பநிலையை கட்டுப்படுத்துகிறது. இதனால் சூடேற்றும் கலன் முழுவதும் அதிக வெப்ப உண்டாவதிலிருந்து பாதுகாக்கப்படுகிறது. நீரின் வெப்பநிலை 85^{0}C அடைந்தவுடன் வெப்ப நிலைப்பி வெப் பமின்னிழைக்கு செல்லும் மின்னோட்டத்தை துண்டிக்கும். நீரின் வெப்பநிலை குறைந்தவுடன் மீண்டும் மின்னிணைப்பு வெப்ப நிலைப்பியால் உண்டாக்கப்படும்.

நீரை வெப்பப்படுத்துவது அதிகமானால் நுகரும் மின்திறனும் அதிகமாகும். ஒரு சாதாரணமான தண்ணீர் சூடேற்றும் கலனின் மின் அளவீடானது 200 வோல்ட், 230/250 வோ 50 லிட்டர் அளவில் இருக்கும்.

தேவையான உபகரணங்கள்

1) மின்சார தண்ணீர் சூடேற்றும் கலன்
2) கை கருவிபெட்டி
3) சோதனை விளக்கு
4) உயர் மின் தடையளவு மானி
5) பல் அளவி



	திறந்த சுற்று	குறுக்குச் சுற்று	நில இணைப்பு பழுது
சோதனை விளக்கு	பிரகாசமாக எரிதல்/ எரியாமை	பிரகாசம்/ மங்கல்	பிரகாசமாக எரிதல்/ எரியாமை
பழுது	பழுது / இல்லை	பழுது / இல்லை	பழுது / இல்லை

செய்முறை

1) தண்ணீர் சூடேற்றும் கலனை மின்இணைப்பிலிருந்து துண்டிக்கவும்.
2) சூடேற்றும் கலனிலிருந்து தண்ணீர் முழுவதும் வெளியேற்றவும்.
3) உயர் மின் தடையளவு மானியால் மின் கசிவிற்கான சோதனை செய்யவும்.
4) வெப்ப மின்னிழை, வெப்ப நிலைப்பி ஆகியவற்றை கழற்றுவதற்கான திருகிகளை கழற்றவும். நில இணைப்பை துண்டிக்கவும்.
5) வெப்ப மின்னிழையில் மின் தொடர்ச்சி சோதனை செய்யவும்.
6) ஹைட்ரோகுளோரிக் அமிலத்தை கொண்ட வெப்பமின்னிழையின் மீது படிந்துள்ள படிவுகளை நீக்கவும்.
7) வெப்ப மின்னிழை, வெப்ப நிலைப்பி ஆகியவற்றை மீண்டும் பொருத்தவும்,
8) மின்கசிவு உள்ளதா என சூடேற்றும் கலனை இணைத்தபின் சோதிக்கவும்.
9) நீர் உட்செல்லும் குழாயை திறந்து சூடேற்றும் கலன் முழுவதும் நீர் நிரப்பவும்.
10) நீர் உட்செல்லும் குழாயின் திருகியை மூடி மின் இணைப்பு செய்யவும்.
11) சில நிமிடங்கள் காத்திருந்து சீரான வெப்பநிலையில் வெந்நீர் கிடைப்பதை உறுதி செய்யவும்.
12) நீர் வெளியேற்று குழாயை மூடி மின்னிணைப்பை துண்டிக்கவும்.

சோதனை அட்டவணை

1) திறந்த சுற்று, குறை சுற்று, நில இணைப்பு சோதனை.

முன்னெச்சரிக்கை

1) மின்னிணைப்பு செய்த பின் சூடேற்றியை தொடக்கூடாது.
2) பிரிப்பதற்கு முன்னும் இணைத்த பின்னும் மின்காப்பு மின்தடை சோதனை செய்ய வேண்டும்.
3) சூடேற்றும் கலனை நீரை நிரப்பி சோதனை செய்ய வேண்டும்.
4) நீண்ட நாள் சூடேற்றும் கலன் பயன்படுத்தாமல் இருந்தால் கலனில் உள்ள நீர் வெளியேற்றப்பட வேண்டும்.

8. மின் காபி வடிப்பி

நோக்கம்

(i) மின் காபி வடிப்பியின் பாகங்கள் அறிதல்
(ii) மின் காபி வடிப்பியை பிரித்து பின் மீண்டும் இணைத்தல்.
(iii) மின் காபி வடிப்பியில் சோதனை செய்து பழுது அறிந்து அதனை நீக்குதல்.

தொடர்புடைய தகவல்கள்

மின் வெப்ப விளைவு பயன்படும் சாதனங்களில் இதுவும் ஒன்று. வீடுகளில் காபி வடிநீர் தயாரிக்க பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. அமைப்பு ஏறத்தாழ நீர் மின் சூடேற்றும் கலனை ஒத்திருக்கும். உட்புறம் சுடுநீர் மேலேறும் கலக்கும் குழாய் ஒன்று மையத்தில் தாங்கி மூலம் நிறுத்தப்பட்டு அதன் உச்சியில் நுண்துளை கொண்ட கிண்ணம் வைக்கப்பட்டுள்ளது. இக்கிண்ணத்தில் காபித்தூள் போட்டு சாதனத்திற்கு மின் இணைப்பு கொடுக்கும்பொழுது கொதிநீர் மேலேறி காபி கிண்ணத்தில் கலந்து காபி வடிநீர் தயாராகிறது. மேல் மூடி கண்ணாடியில் செய்யப்பட்டுள்ளதால் கண்ணாடியின் மூலம் நிறத்தை பார்த்து காபி வடிநீர் தயாரானதை அறிந்து கொள்ளலாம்.

தேவைப்படும் கை கருவிகள்

1.	மின்காப்பு உறையிடப்பட்ட குறடு	–	1
2.	திருகி 20 செ.மீ. & 10 செ.மீ.	–	1
3.	ஸ்பானர் செட்	–	1
4.	சோதனை விளக்கு	–	1

தேவைப்படும் உபகரணம்

1.	மின்காபி வடிப்பி	–	1

செய்முறை

பிரித்தல்

(i) மேலே கண்ணாடி மூடியை தனியே பத்திரமாக எடுத்து வைக்கவும்.
(ii) கலக்கும் குழாயுடன் கூடிய காபி கிண்ணத்தை தனியே எடுத்து வைக்கவும்.
(iii) அடிப்புற தகட்டை திருகுகளை நீக்கி கழற்றவும்.
(iv) திருகுகளை கழற்றி பக்கவாட்டு உட்புறச் சுவரில் இணைக்கப்பட்டுள்ள மின் இணைப்பை நீக்கவும்.
(v) அடுத்துள்ள திருகை கழற்றி வெப்பமின்னிழை, மைக்கா அட்டை, கல்நார் அட்டை ஆகியவற்றை கழற்றி தனியே வைக்கவும்.
(vi) வட்ட வடிவில் மைக்கா அட்டை டையின் மீது சுற்றப்பட்டுள்ள பட்டை வடிவ நைக்ரோம் கம்பி வெப்ப மின்னிழையாக பயன்படுத்தப்படுகிறது.

சோதனை

வெப்ப மின்னிழையில் தாமிர மின் தொடுமுனைகளுடன் ஆய்வு விளக்கை இணைக்கவும்.

விளக்கு எரியவில்லை என்றால் திறந்த சுற்று பழுது ஏற்பட்டுள்ளது. துண்டிப்பை அறிந்து இணைக்கவும்.

விளக்கு மங்கலாக எரிந்தால் மின்னிழை நல்ல நிலையில் உள்ளது என அறியலாம்.

இணைத்தல்

அடிப்பகுதியில் வெப்ப மின்னிழை அதன் கீழ் மைக்கா, கல்நார் அட்டையை வைத்து அழுத்தத் தகடை திருகு மூலம் இறுக்கமாக பொருத்தவும்.

குறுக்குச் சுற்று ஏற்படாவண்ணம் மின் இணைப்பை செய்யவும்.

அடி மூடியை பொருத்தவும்.

சாதனத்தை இயக்கும் முன் குறுக்கு சுற்று திறந்த சுற்று தரையிடல் பழுது உள்ளனவா என சரிபார்க்கவும்.

எச்சரிக்கை

(i) பிரித்தல் பணி மேற்கொள்வதற்கு முன் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதா என சரிபார்க்கவும்







திறந்த மற்றும் குறைச்சுற்று சோதனை



நில இணைப்புச் சோதனை

	திறந்த சுற்று	குறுக்குச் சுற்று	நில இணைப்பு பழுது
சோதனை விளக்கு	பிரகாசமாக எரிதல்/ எரியாமை	பிரகாசம்/ மங்கல்	பிரகாசமாக எரிதல்/ எரியாமை
பழுது	பழுது / இல்லை	பழுது / இல்லை	பழுது / இல்லை


மூடி
கலக்கும் பாத்திரம்
கத்தித் தொகுப்பு
கத்தித் தொகுப்பு அச்சு
ரப்பர் சக்தி மாற்று இணைப்பி
மின்னோடி அச்சு
வெளிக்கூடு
மின்னோடி
மின்னகம்
திசைமாற்றி
கரி வகை திரட்டி
இணைப்பு கடத்திகள்
மூன்று முனை மேல் பகுதி
HIGH
OFF
வேகக்கட்டுப்பாட்டு திருகி
ரப்பர் தாங்கி
மின் வடம்

மின் கூழாக்கி

9. மின் கூழாக்கி

நோக்கம்

(i) மின் கூழாக்கியை பிரித்தல்.
(ii) மின் கூழாக்கியின் பல்வேறு பாகங்களை அறிதல்.
(iii) சோதனைகளை மேற்கொண்டு பழுதுகளை கண்டறிதல். நிவர்த்தி செய்தல்.
(iv) மின் கூழாக்கியை மீண்டும் இணைத்து இயங்கச் செய்தல்.

தொடர்புடைய தகவல்கள்

மின் கூழாக்கியானது விட்டு பெண்மணிகளுக்கு மிக உதவிகரமான ஒரு மின்சாதனம் ஆகும். இச்சாதனம் வெங்காயம், தக்காளி, தேங்காய், இஞ்சி, மிளகாய் ஆகியவற்றை அரைக்க உதவுகிறது. மேலும் பழச்சாறுகள், பால் ஐஸ்கிரிம் உண்டாக்கவும் உதவுகிறது.

மின் கூழாக்கி மிக அதிக வேகத்தில் சுழலக் கூடியது. இது பல்வேறு அளவுகளில் கிடைக்க பெறுகிறது. மிகப் பெரிய வகை வணிக உபயோகத்திற்கு பயன்படுகிறது.

மின் கூழாக்கியின் அமைப்பானது மூன்று பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது.

(i) அடிப்பகுதி இப்பகுதியில் ஒரு முழுமை இயங்கி வேகக் கட்டுப்பாட்டுச் சாவி மற்றும் மின் இணைப்பை உண்டாக்கும் / துண்டிக்கும் சாவிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. வேகக் கட்டுப்பாட்டுச் சாவி பல்வேறு சுழற்சியை உண்டாக்கும்.

(ii) கூழாக்கி மற்றும் தூளாக்கி துருவிகள் இரு வகைப்படும். பழச்சாறு, சட்னி போன்றவற்றிற்கு உதவும் துருவிகள் கூழாக்கி எனப்படும். உலரவைத்த பொருட்களை தூளாக்கும் துருவிகள் தூளாக்கி (Grinder) எனப்படும்.

(iii) மேல்பாத்திரம் கூழாக்குதல் அல்லது தூளாக்குதல் நடைபெறும் பாத்திர அமைப்பு மேல் பாத்திரம் ஆகும். தூளாக்குதல்/கூழாக்குதல் நடைபெற்ற பிறகு மேல் பாத்திரம் தனியே எடுக்கப்படும்.

துருவிகளுடன் கூடிய மேல்பாத்திரம் நைலான் மேடுபள்ள அமைப்பின் உதவியால் இணைக்கப்படுகின்றன.

தேவையான கைக்கருவிகள்

(i)	மின்காப்பு உறையிடப்பட்ட கைக்குறடு	–	1
(ii)	கைப்பிடி மின் காப்பிடப்பட்ட திருகி 15 செ.மீ.	–	1
(iii)	கைப்பிடி மின் காப்பிடப்பட்ட திருகி 25 செ.மீ.	–	1
(iv)	சோதனை விளக்கு	–	1
(v)	தாங்கி பிடுங்கி	–	1

தேவையான உபகரணங்கள்

மின் கூழாக்கி (அல்லது) கலக்கி – 1

செய்முறை

பிரித்தல்

(i) மின்சார கலக்கியின் இணைப்புகளை உற்று கவனி– 1

(ii) மேல் பாத்திரத்தை தனியே கழற்றி எடு

திறந்த மற்றும் குறைச்சுற்று சோதனை



நில இணைப்புச் சோதனை



	திறந்த சுற்று	குறுக்குச் சுற்று	நில இணைப்பு பழுது
சோதனை விளக்கு	பிரகாசமாக எரிதல்/ எரியாமை	பிரகாசம்/ மங்கல்	பிரகாசமாக எரிதல்/ எரியாமை
பழுது	பழுது / இல்லை	பழுது / இல்லை	பழுது / இல்லை

(iii) அடிப்பகுதியின் திருகுகளை கழற்றி மூடியை எடுக்கவும்.
(iv) நடுத்தண்டிலிருந்து நைலான் இணைப்பை நீக்கவும்.
(v) இயக்கியை நிலைநிறுத்தும் திருகுகளை கழற்றவும்
(vi) இயங்கியை வெளியே எடுக்கவும்.
(vii)முழுமை இயங்கியை பிரிக்கவும்.
(viii) தொடுவிகளை சோதிக்கவும்.
(ix)நடுத்தண்டு, தொடுவிகளை மண்ணெண்ணெய் கொண்டு தூய்மைப்படுத்தவும்.
(x) தொடுவிகளுக்கு உயவு எண்ணெய் இடவும்.
(xi)ஆய்வு விளக்கை கொண்டு தொடர்ச்சி சோதனை மேற்கொள்ளவும்.
(xii) ஆய்வு விளக்கு சற்று மங்கலாக ஒளிர்ந்தால் பழுது இல்லை என அறியவும்.
(xiii) ஆய்வு விளக்கு மூலம் தரையிடல் பழுது உள்ளதா என சோதிக்கவும்.

இணைத்தல்

கார்பன் தொடுவிகளை சரியாக பொருத்தவும்.
இயங்கியை பொருத்தவும்.
மேல்புறம் நடுததண்டில் நைலான் இணைப்பை (இணைக்கவும்)

சோதனைகள் மேற்கொண்டு பழுதுகள் ஏதுமில்லை என உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

எச்சரிக்கைகள்

(i) மின் கூழாக்கியை தொடர்ந்து 2 நிமிடங்களுக்கு மேல் இயக்கக் கூடாது.
(ii) ஒவ்வொரு முறை பயன்பாட்டுக்குப் பின்னும் மேல்பாத்திரம் நீர் கொண்டு தூய்மைப்படுத்தப்பட வேண்டும்.
(iii) மின் இயங்கியின் உட்புறம் தண்ணீர் உட்புகக் கூடாது.
(iv) மின் கூழாக்கி இயங்கும் பொழுது மேல் பாத்திரத்தின் உட்புறம் எக்காரணம் கொண்டும் கை விரல்களை நுழைக்கக் கூடாது.

10. முட்டை கலக்கி

நோக்கம்

கொடுக்கப்பட்ட முட்டை கலக்கியை

1) பிரித்தல்
2) சோதனை செய்தல்
3) மீண்டும் இணைத்தல்

தொடர்புடைய தகவல்

வீடுகளில் பயன்படுத்தப்படும் சாதனங்களில் முட்டை கலக்கி ஒன்றாகும். முட்டை கலக்கியில் ஒரு சிறிய முழுமையியங்கி பயன்படுத்தப்படுகிறது. மின்னோடி அச்சில், ஒரு கத்தி தொகுப்பு உள்ளது. இக்கத்தி தொகுப்பு சுழலுவதால் முட்டை மாவு பொருட்கள் நன்கு கலக்கப்படுகிறது.

தேவைப்படும் கைக்கருவிகள்

1)	மின்காப்பு உறையிடப்பட்ட குறடு	–	1
2)	திருகி 20 செ.மீ. 10. செ.மீ.	–	1
3)	ஸ்பானர் செட்	–	1
4)	சோதனை விளக்கு	–	1

தேவையான உபகரணம்

1)	முட்டை கலக்கி	–	1

செய்முறை

முட்டை கலக்கியின் பாகங்கள்

1) முழுமை இயங்கி
2) பற்சக்கரம்
3) கத்தி தொகுப்பு

பிரித்தல்

முட்டை கலக்கியின் மூடியை கழற்றவும் கத்தி தொகுப்பை கழற்றவும், பற்சக்கரங்களை கழற்றவும்.

சோதனை

மின்னோடியை திறந்த சற்ற, குறை சுற்று, நில இணைப்பு சோதனை மற்றும் தாங்கிகளின் நிலை, பற்சக்கரத்தின் தேய்மானம் ஆகியவற்றை சோதனை செய்ய வேண்டும்.

மீண்டும் இணைத்தல்

மின்னோடியை முட்டை கலக்கியின் உள்ளே வைத்து பற்சக்கரத்தினை மின்னோடியின் அச்சுடன் பொருத்த வேண்டும். பின் கத்தி தொகுப்பை பொருத்த வேண்டும்.

இணைத்தபின் செய்யவேண்டிய சோதனை

சோதனை விளக்கை கொண்டு திறந்த சுற்று, குறை சுற்று, நில இணைப்பு சோதனை செய்ய வேண்டும்.

முன்னெச்சரிக்கை

1) மின்னிணைப்பு செய்தபின் சூடேற்றியை தொடக்கூடாது.
2) பிரிப்பதற்கு முன்னும் இணைத்த பின்னும் மின்காப்பு மின்தடை சோதனை செய்ய வேண்டும்.
3) சூடேற்றும் கலனை நீரை நிரப் பசோதனை செய்ய வேண்டும்.
4) நீண்ட நாள் சூடேற்றும் கலன் பயன்படுத்தாமல் இருந்தால் கலனில் உள் ள நீர் வெளியேற்றப்பட வேண்டும்.

முட்டைக்கலக்கி

திறந்த மற்றும் குறைச்சுற்று சோதனை



நில இணைப்புச் சோதனை



	திறந்த சுற்று	குறுக்குச் சுற்று	நில இணைப்பு பழுது
சோதனை விளக்கு	பிரகாசமாக எரிதல்/ எரியாமை	பிரகாசம்/ மங்கல்	பிரகாசமாக எரிதல்/ எரியாமை
பழுது	பழுது / இல்லை	பழுது / இல்லை	பழுது / இல்லை

11. மேஜை மின்விசிறி

நோக்கம்

(i) கொடுக்கப்பட்டுள்ள மேஜை மின்விசிறியை பிரித்து அதன் பாகங்களை அறிதல்

(ii) கொடுக்கப்பட்டுள்ள மேஜை மின்விசிறியில் சோதனைகள் மேற்கொண்டு பழுதுகளிருப்பின் கண்டறிந்து அவற்றை நீக்கி பின் இணைத்தல்.

(iii) மின்னிணைப்பில் இணைத்து அதனை இயங்கச் செய்தல்.

தொடர்புடைய தகவல்கள்

மேஜை மின்விசிறி 22 செ.மீ. 30 செ.மீ. 35 செ.மீ. மற்றும் பல வீச்சுகள் அளவுகளில் உள்ளது.

அனைத்து உபயோக மேஜை மின்விசிறிகளில் நிழலிட்ட காந்த முனை மின்னியங்கி இவற்றில் உள்ளது. உயரமான தாங்கிகள் பொருத்தப்பட்ட அதிவேக மின்மேஜை மின் விசிறிகள் (Pedestal Fan) என்று அழைக்கப்படுகிறது. மேஜை மின் விசிறிகள் குறிப்பிட்ட பகுதியில் காற்றை வீசுவதற்கு பயன்படுத்தப்படுகிறது. மின்விசிறிகளில் பொதுவாக நிரந்தர கொண்மத்துடன் கூடிய ஒரு முனை தூண்டல் இயங்கிகள் (Capacitor Run Induction Motor) பயன்படுத்தப்படுகின்றன. விசிறிகள் இயங்கியின் சுழலும் நடுத்தண்டில் பொருத்தப்பட்டுள்ளது. ஆபத்தை தவிர்க்க விசிறிகளை சுற்றி பாதுகாப்பு வலை அமைப்பு பொருத்தப்பட்டுள்ளது. மேஜை மின்விசிறியியில் அதன் உடல் பகுதியின் மேற்புறம் இயங்கியும் அதன் அடிப்பகுதியில் வேக கட்டுப்பாட்டு சாவியும் உள்ளது. மேஜை மின்விசிறியின் மின்திறன் ஏறத்தாழ 60 வாட்ஸ் அலகு.

தேவையான கைக்கருவிகள்

(i)	மின்காப்பு உறையிடப்பட்ட கைக்குறடு	–	1
(ii)	கைப்பிடி மின் காப்பிடப்பட்ட திருகி 15 செ.மீ.	–	1
(iii)	கைப்பிடி மின் காப்பிடப்பட்ட திருகி 25 செ.மீ.	–	1
(iv)	சோதனை விளக்கு	–	1
(v)	தாங்கி பிடுங்கி	–	1

தேவையான உபகரணங்கள்

1. மேஜை மின்விசிறி	–	1
2. மின்காப்பு பட்டை சுருள்	–	1
3. உயவு எண்ணை அல்லது கிரிஸ்	–	1 உறை
4. மண்ணெண்ணெய்	–	100 மி.லி.
5. துடைக்கும் துணி	–	
6. மரப்பலகை 2”x3”x1/2	–	1

செய்முறை

பிரித்தல்

(iii) பாதுகாப்பு வலையின் கொக்கிகளை அகற்றவும். வலையை தனியே எடுத்து வைக்கவும். விசிறிக்கான திருகை தளர்த்தி நடுத் தண்டிலிருந்து கழற்றி எடுக்கவும்.

(v) பின்மூடியின் திருகுகளை கழற்றி மின்மூடியை உருவி எடுக்கவும். அலைவி இயந்திரப் பொறிப் பெட்டியை தனியே கழற்றி எடுக்கவும்.

(vii) சுழலியை தனியே உருவி எடுக்கவும். சுழலியின் நடுத்துண்டு உறைத் தாங்கி ஆகியவற்றை மண்ணெண்ணெய் மற்றும் துணியால் நன்கு துடைத்து வைக்கவும். சுழலிப் பகுதியை கவனமாக சுருள்கள் பாதிக்காவண்ணம் துணியால் துடைக்கவும்.

(xii) இயங்கி நிலையிப் பகுதியிலுள்ள சுருள்களுடன் ஆய்வு விளக்கை இணைத்து சோதிக்கவும். அடிப்பகுதியிலுள்ள மின்னேற்பியை சோதித்து சரியாக உள்ளதா என உறுதிப்படுத்தவும்.

இணைத்தல்

(i) சுழலி பின் பகுதியின் மூடி, அலைவு இயந்தரப் பொறிப்பெட்டி ஆகியவற்றை இறுக்கமாக முன்பிருந்ததைப் போல் இணைக்கவும்.

(ii) முன்புறத்தில் விசிறி, பாதுகாப்பு வலை ஆகியவற்றை பொருத்தவும்.

(iii) குறுக்குச் சுற்று, திறந்த சுற்று, தரையிடல் பழுதுகள் உள்ளதா என ஆய்வு விளக்கு கொண்டு சோதித்து சரி பார்க்கவும்.

எச்சரிக்கைகள்

(i) பிரித்தல் இணைத்தல் மேற்கொள்ளும் பொழுது சுத்தியலை பயன்படுத்தக் கூடாது.



திறந்த மற்றும் குறைச்சுற்று சோதனை



நில இணைப்புச் சோதனை



	திறந்த சுற்று	குறுக்குச் சுற்று	நில இணைப்பு பழுது
சோதனை விளக்கு	பிரகாசமாக எரிதல்/ எரியாமை	பிரகாசம்/ மங்கல்	பிரகாசமாக எரிதல்/ எரியாமை
பழுது	பழுது / இல்லை	பழுது / இல்லை	பழுது / இல்லை



கூறை மின்விசிறி

12. கூரை மின் விசிறி

நோக்கம்

(i) கொடுக்கப்பட்டுள்ள மின்விசிறியை பிரித்து அதன் பாகங்களை அறிதல்.
(ii) கொடுக்கப்பட்டுள்ள மின்விசிறியில் சோதனைகள் மேற்கொண்டு பழுதுகள் இருப்பின் கண்டறிந்து அவற்றை நீக்கி பின் இணைத்தல்.

தொடர்புடைய தகவல்கள்

கூரை மின்விசிறியை கையாளுவதற்கு முன் அந்த மின்விசிறியை பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள வேண்டும். அம் மின்விசிறியின் உலோக மேல்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பெயர் பலகையிலிருந்து அவ்விரங்களை அறியலாம். அவ் விவரங்கள் உபகரணத்தை முறையாக பயன்படுத்த நமக்கு உதவுகிறது. பொதுவாக கூரை மின் விசிறிகளில் நிரந்தர கொண்மத்துடன் கூடிய பிரிமுனை தூண்டல் இயங்கிகளே(Capacitor Run Split Phase Induction Motor) பொருத்தப்பட்டு அவற்றின் நிலையி பகுதி மையத்திலும் சுழலும் பகுதி அதனைச் சுற்றி வளையம் போன்றும் (வெளிப்பக்கமாக) அமைக்கப்பட்டுள்ளது. கூரை மின்விசிறி உலோக குழாய் மூலம் கூரையிலிருந்து தொங்கவிடப்படுகிறது. மின் இணைப்பு கொடுத்தவுடன் இயங்கியின் வெளிப்பகுதி சுழன்று சுற்றுப்புர காற்ற கீழ்நோக்கி வீசுகிறது. வசப்படு மகாற்றின் அளவு இயங்கியின் வேகத்தை பொறுத்து அமையும். வேகக் கட்டுப்பாடு சாதனம் இயங்கிக்கு தொடர் இணைப்பில் இணைக்கப்பட்டிருக்கும். கூரை மின் விசிறியினை அனைத்துப் பகுதிகளும் இறுக்கமாக இணைக்கப்பட்டிருக்கும். தளர்வான இணைப்புகள் ஏற்படாமல் தடுக்க இணைப்பு போல்டுகள் இரு கம்பிகள் மூலம் பூட்டப்பட்டு இருக்கும்.

தேவையான கைக் கருவிகள்

(i)	மின்காப்பு உறையிடப்பட்ட கைக்குறடு	–	1
(ii)	கைப்பிடி மின் காப்பிடப்பட்ட திருகி 15 செ.மீ	–	1
(iii)	கைப்பிடி மின் காப்பிடப்பட்ட திருகி 25 செ.மீ.	–	1
(iv)	சோதனை விளக்கு	–	1
(v)	தாங்கி பிடுங்கி	–	1

தேவையான பொருள்கள்.

கூரை மின்விசிறி 200ஏ	–	1
மின்காப்பு பட்டை சுருள்	–	1
உயவு எண்ணை அல்லது கிரில்	–	1 உறை
மண்ணெண்ணெய்	–	100 மி.லி
துடைக்கும் துணி	–	
மரப்பலகை 2”x3”x1/2	–	1

செய்முறை
பிரித்தல்

பிரிப்பதற்கு முன் ஒரு கையால் மின்விசிறியை தூக்கி மறுகையால் சுழலச் செய்து, சுழலும் பொழுது தாங்கிகளில் சத்தம் வருகிறதா என கவனி. சத்தம் வந்தால் தாங்கியில் பழுது உள்ளது என அறியலாம்.

மின்னேற்பியை தனியாக பிரித்தெடு.
மின்இணைப்பு கடத்திகளை பிரித்து விடு.

திறந்த மற்றும் குறைச்சுற்று சோதனை



நில இணைப்புச் சோதனை



	திறந்த சுற்று	குறுக்குச் சுற்று	நில இணைப்பு பழுது
சோதனை விளக்கு	பிரகாசமாக எரிதல்/ எரியாமை	பிரகாசம்/ மங்கல்	பிரகாசமாக எரிதல்/ எரியாமை
பழுது	பழுது / இல்லை	பழுது / இல்லை	பழுது / இல்லை

சோதனை விளக்கைக் கொண்டு சுருள்களின் முனைகளை சோதிக்கவும். மங்கலாக ஆய்வு விளக்கு எரிந்தால் சுருள்கள் நல்ல நிலையில் உள்ளது என அறியலாம்.

உலோகப் பகுதிக்கு சுருள்களின் மின் முனைகளுக்குமிடையே தொடர்ச்சி சோதனை மேற்கொள்க, ஆய்வு விளக்கு எரியவில்லை எனில் தரையிடல் பழுது இல்லை என அறியலாம்.

மின்னேற்பியை ஆய்வு விளக்கு கொண்டு தொடர்ச்சி சோதனை செய்க. தொடர்ச்சி சோதனை மேற்கொள்ளும்பொழுது ஆய்வு விளக்கு ஒளிர்ந்து மின்னேற்பி மின்னேற்றமடையும். ஆய்வுமுனைகளை துண்டித்தப்பின் மின்னேற்பியின் மின்முனைகளை ஒரு கடத்தியின் மூலம் குறுக்குச் சுற்றாக்கு. தீப்பொறி ஏற்படின், மின்னேற்பி நல்ல நிலையில் உள்ளது என உணர்த்தும்.

கூரை மின்விசிறியில் உள்ள போல்டுகள், திருகுகளை கழற்றவும். அதற்கு முன் சிறு கம்பி மூலம் அவை பூட்டப்பட்டிருக்குமானால் அவற்றை நீக்கவும்.

விசிறிகள், கீழ்மூடி ஆகியவற்றை பத்திரமாக பிரித்து எடுக்கவும்.

அதே போல் மேல்மூடியையும் கழற்றி எடுக்கவும்.

மையத் தண்டிலிருந்து கோளத்தாங்கிகள்/உறைத் தாங்கிகளை கழற்றவும்.

கோளத் தாங்கி / உறைத்தாங்கிகளை மண்ணெண்ணை மூலம் தூய்மைப்படுத்தவும்.

இணைத்தல்

கோளத்தாங்கி / உறைத்தாங்கிகளுக்கு உயவுப் பொருள் இடவும்.

அவற்றைப் பொருத்தவும். உயவுப் பொருள் நன்கு இடப்பட்டுள்ளதா என மீண்டும் கண்காணிக்கவும்.

அனைத்து பாகங்களையும் இணைக்கவும்.

திருகு, போல்டுகளை பொருத்தவும்.

இயங்கியின் மின் இணைப்புகளை இணைத்து பின் சோதித்து சரியாக உள்ளது என உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

விசிறிகளை சரியாக இறுக்கமாக திருகி மூலம் பொருத்தவும்.

கூறை மின் விசிறியை உரிய இடத்தில் பொருத்தவும். மின்சக்தியுடன் மின் இணைப்பு கொடுக்கவும்.

எச்சரிக்கைகள்

பிரித்தல், இணைத்தல் மற்றும் சோதித்தல் ஆகியவற்றை உரிய மரப்பலகைகள் மீது வைத்து செய்யவும்.

நட்டுகள், போல்டுகள், சிறு உதிரி பாகங்கள் ஆகியவற்றை கழற்றி சிறு தட்டு, அல்லது கிண்ணங்களில் பாதுகாப்பாக வைக்கவும்.

உறைத்தாங்கிக்கு கிரீஸ் இடக்கூடாது. உயவு எண்ணையிடவும். கோளத் தாங்கிகளுக்கு கிரீஸ் இடவும்.

மின்விசிறியின் விசிறிகளை கவனமாக கையாளவும். அவற்றில் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் மின்னியங்கியையும் அதன் தாங்கிகளையும் பாதிப்பு அடையச் செய்து விடும்.

13 மின்நீரேற்றி

நோக்கம்

(i) இயங்கியை பிரித்து அதன் பாகங்களை அறிதல்
(ii) நீறேற்றியை பிரித்து பாகங்களை அறிதல்.
(iii) சோதனைகள் மேற்கொண்டு பழுது அறிந்து நீக்குதல்.

தொடர்புடைய தகவல்கள்

வீடுகளில் உள்ள தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களை இயக்க இவ்வகை இயங்கிகள் பயன்படுத்தப்படுகிறது. நிலையி பகுதியில் 2 சுருள்கள் சுற்றப்பட்டுள்ளது.

(i) முதன்மைச் சுருள்

(ii) துணைச் சுருள்

துணைச்சுருளுக்கு தொடரிணைப்பில் ஒரு மை யவிலக்குச் சாவியும் துவக்கச் கொண்மமும் இணைக்கப்பட்டுள்ளது.

செய்முறை

பிரித்தல்

(i) மின்னோடியின் அச்சையும், நீரேற்றியின் அச்சையும் பிரிக்கவும்.

(ii) மின்னோடியின் நிலையியில் இருந்து சுழலியை சுழற்றவும்.

(iii) நிலையியின் சுற்றுக்களை துண்டிக்கவும்.

(iv) சுற்றுக்களை சோதனை செய்யவும்.

(v) கொண்மத்தை சோதனை செய்யவும்.

(vi) நீரேற்றியை பிரிக்கவும்.

(vii) சுழலு தகட்டு தொகுப்பை பிரிக்கவும்.

சோதனைகள்

(i) முதன்மைச் சுருள், துணைச் சுருள் ஆகியவற்றுடன் ஆய்வு விளக்கை இணைத்து குறுக்குச் சுற்று, திறந்தச் சுற்று சோதனைகள் தனித்தனியே செய்யவும்.

(ii) முதன்மைச் சுருள், துணைச் சுருள் மின் முனைகளுக்கும், இயங்கியின் உலோகப் பகுதிக்கும் இடையே தொடர்ச்சி சோதனை மேற்கொண்டு தரையில் பழுது உள்ளதா என சோதனை செய்யவும்.

(iii) மைய விலக்குச் இணைப்பியை பிரித்து ஸ்பிரிங் இணைப்புகள் சரியாக உள்ளதா என ஆய்வு செய்தல் வேண்டும்.

(iv) மின்னேற்பியில் செய்ய வேண்டிய சோதனைகளை மேற்கொள்ளவும்.


வெளியேற்றும் குழாய்
துருத்தி
உறிஞ்சும் கண்
துருத்தியின் இறக்கை

துவக்க சுற்றில் திறந்த மற்றும் குறைச்சுற்று சோதனை



துவக்க சுற்றில் நில இனைப்பு சோதனை



இயக்கச்சுற்றில் நில இணைப்பு சோதனை



இயக்கச்சுற்றில் திறந்த மற்றும் குறைச்சுற்று சோதனை



	திறந்த சுற்று	குறுக்குச் சுற்று	நில இணைப்பு பழுது
சோதனை விளக்கு	பிரகாசமாக எரிதல்/ எரியாமை	பிரகாசம்/ மங்கல்	பிரகாசமாக எரிதல்/ எரியாமை
பழுது	பழுது / இல்லை	பழுது / இல்லை	பழுது / இல்லை

(v) மைய விலக்கு நீரேற்றியை சோதனை செய்யவும்.

(vi) திணிப்பு கயிறு சரியான முறையில் அமைக்கப்பட்டுள்ளதா என சோதித்தறிதல்.

(vii) உட்புறம் சுழலும் தகடுகள் வளைவுகளின்றி உள்ளதா என சோதிக்கவும்.

இணைத்தல்

(i) மின்னோடியின் நிலையில் சுழலியை பொருத்தவும்.

(ii) துணைச் சுருளுடன் மையவிலக்கு இணைப்பியையும், கென்மத்தையும் தொடர் இணைப்பில் இணைக்கவும்.

(iii) துணைச் சுருளையும், முதன்மைச் சுருளையும் பக்க இணைப்பில் இணைக்கவும்.

(iv) சுழலும் தகட்டு தொகுப்பை நீரேற்றியின் வெளிக்கூட்டின் உள்ளே பொருத்தவும்.

(v) நீரேற்றியின் அச்சையும், மின்னேற்றியின் அச்சையும் ஒரே நேர்க்கோட்டில் பொருத்தவும்.

(vi) வெளிபோக்கு குழாய், உறிஞ்சும் குழாய், ஆகியவற்றை இணைக்கவும்.

(vii) Foot Valve- ஐ குறைந்தது 1/2 மீட்டர் ஆழத்தில் பொருத்தவும்.

(viii) மைய விலக்கு குழாயில் தண்ணீர் கெட்டிப்பு செய்யவும்.

(ix) திணிப்பு கயிறு வழியே நீர் கசிவு உள்ளதா என சோதிக்கவும்.

(x) சோதனை ஓட்டத்தை மேற்கொள்ளவும்.

எச்சரிக்கை

(i) பிரித்தல் செயலை செய்யுமுன் மின் இணைப்பை முற்றிலும் துண்டிக்கவும்.

(ii) இயங்கியின் நடுத்தண்டு மையவிலக்கு துருத்தியுடன் இணையாக உள்ளதா என உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

14. மின் சிகை உலத்தி

நோக்கம்

(i) கொக்கப்பட்ட மின் சிகை உலர்த்தியை பிரித்தல்.
அதன் பாகங்களை அறிதல்.

(ii) சோதனைகள் மேற்கொண்டு பழுதுகளை அறிதல்.
மின்சிகை உலர்த்தியை மீண்டும் இணைத்தல்.

தொடர்புடைய தகவல்கள்

மின் சிகை உலத்தி கையாள எளிமையான நம் கூந்தலை உலர்த்தும் ஒரு மின்சாதனம் ஆகும். உட்புறம் ஒரு சிறிய மின்னியங்கிளையும் ஒரு வெப்ப மின்னிழைத் தொகுதியையும் கொண்டுள்ளது. மின்னியங்கியின் விசிறியில் இருந்து காற்றானது. வெப்ப மின்னிழையின் மீது ஊதப்பட்டு வெப்பம் பெற்று வெளி வருகிறது. 2 மின் கடத்திகளை கொண்ட மின் இணைப்பு கயிறு (Card) மின் இணைப்புத் தர பயன்படுத்தப்படுகிறது. மின்விசிறியும் வெப்ப மின்னிழைத் தொகுதியும் உடையாத பேக்லைட் உடல் பகுதியினுள் பொருத்தப்பட்டுள்ளது. மின்சிகை உலர்த்தியில் உள்ள மின் விசிறியில் பயன்படும் மின்னியங்கி 220 வோல்ட் மின்னழுத்தத்தில் இயங்கும் நிழலிட்ட காந்தமுனை கொண்ட சிறிய வகை மின்னியங்கி ஆகும்.

தேவைப்படும் கைக் கருவிகள்

(i)	மின்காப்பு உறையிடப்பட்ட கைக்குறடு	–	1
(ii)	கைப்பிடி மின் காப்பிடப்பட்ட திருகி 15 செ.மீ.	–	1
(iii)	கைப்பிடி மின் காப்பிடப்பட்ட திருகி 25 செ.மீ.	–	1
(iv)	சோதனை விளக்கு	–	1
(v)	தாங்கி பிடுங்கி	–	1

தேவைப்படும் உபகரணங்கள்

1. மின் சிகை உலர்த்தி	–	1
2. மின்காப்பு பட்டை சுருள்	–	1
3. உயவு எண்ணை அல்லது கிரிஸ்	–	1 உறை



மின்சிகை உலர்த்தி

திறந்த மற்றும் குறைச்சுற்று சோதனை



நில இணைப்புச் சோதனை



	திறந்த சுற்று	குறுக்குச் சுற்று	நில இணைப்பு பழுது
சோதனை விளக்கு	பிரகாசமாக எரிதல்/ எரியாமை	பிரகாசம்/ மங்கல்	பிரகாசமாக எரிதல்/ எரியாமை
பழுது	பழுது / இல்லை	பழுது / இல்லை	பழுது / இல்லை

4.	மண்ணெண்ணெய்	–	100 மி.லி
5.	துடைக்கும் துணி	–	
6.	மரப்பலகை 2"x 3"x 1/2	–	1

செய்முறை

பிரித்தல்

(i) கைக் கருவிகளை சேகரித்துக் கொள்.

(ii) மின்இழை உலர்த்தியின் அமைப்பை, இணைப்பை உற்று கவனித்துக் கொள்.

(iii) உடல்பகுதியின் திருகுகளை கழற்று.

(iv) மூடியை திற.

(v) வெப்பமின்னிழை, சாவி இணைப்பை சோதனை செய்.

(vi) மின்னியங்கித் தொகுதியை கவனமாக வெளியே எடு.

(vii) மின்னியங்கியை சோதனை செய்.

(viii) உறைத் தாங்கி, நடுத் தண்டு ஆகியவற்றை மண்ணெண்ணெய் கொண்டு சுத்தம் செய்து இணை.

(ix) உறைத் தாங்கிக்கு உயவு எண்ணையிடு.

இணைத்தல்

(i) மின்னியங்கித் தொகுதியை பொருத்து.

(ii) வெப்பமின்னிழைத் தொகுதி, கட்டுப்படுத்தும் சாவிகளை பொருத்தி மின் இணைப்பு கொடு.

(iii) மேல்மூடிகளை பொருத்தி உடல்பகுதியில் உள்ள திருகுகளை இறுக்கமாக பொருத்து.

(iv) குறுக்குச் சுற்று, திறந்த சுற்று, தரையிடல் பழுது உள்ளதா என ஆய்வு விளக்கை கொண்டு சோதித்து பழுதுகள் இல்லை என உறுதி செய்து கொள்.

(v) சோதனை இயக்கம் மேற்கொள்.

எச்சரிக்கைகள்

(i) சாதனம் இயங்கும் பொழுது வெப்பக் காற்று வெளிவரும் முகப்பு வழியாக உலோக பொருட்களையோ, கை விரல்களையோ நுழைத்தல் கூடாது.

15. வெற்றிட துப்புரவி

நோக்கம்

1) பழுதடைந்த வெற்றிட துப்புரவியை பிரித்தல்.
2) பழுதை கண்டறிந்து நீக்குதல்
3) மீண்டும் இணைத்து சோதித்தல்

தொடர்புடைய தகவல்கள்

தரையில் படிந்துள்ள தூசுகளை ஒரு காற்று ஊதி செயல்பாட்டால் உண்டாகும். வெற்றிடத்தை பயன்படுத்தி உறிந்து எடுக்கும் ஒரு உபகரண மவெற்றிட துப்புரவியாகும். தூசுகள் ஒரு வடிகட்டும் பையில் சேமிக்கப்படுகிறது.

செயல்படும் விதம்

ஒரு வெற்றிட துப்புரவியின் செயல்பாடு காற்று அழுத்தத்தை பொறுத்தே அமையும். துப்புரவிக்கு மின்னிணைப்பு வழங்கியதும் மின்னோடி சுழல துவங்கப்படுகிறது. இதனால் மின்னோடியின் அச்சில் உள்ள விசிறி சுழன்று காற்றானது அழுத்தத்துடன் மேல் நோக்கி வீசப்படும். விசிறியின் முன்புற காற்று தள்ளப்படுவதால் விசிறியின் பின்புறத்தில் காற்றின் அடர்த்தி குறையும். இதனால் வெற்றிடம் உண்டாகும். இக்காற்றழுத்த குறைவினால் வெளிக்காற்று துப்புரவிக்கு உள்ளே உறிஞ்சப்படும்.

தேவையான கை கருவிகள்

1)	காப்பிடப்பட்ட குறடு	–	1	
2)	திருகி – 20 செ.மீ 10 .செமீ		1	(ஒவ்வொன்றும்)
3)	சோதனை விளக்கு	–	1	

தேவையான உபகரணம்

1) வெற்றிட துப்புரவி – 1

தேவையான சோதனை அளவி

1) பல் அளவி – 1

செய்முறை

வெற்றிட துப்புரவியின் முக்கிய பாகங்கள்.

1) உறிஞ்சும் பகுதி
2) வெளியேற்றும் பகுதி
3) விசிறி
4) மின்னோடி
5) வடிகட்டும் பை
6) மின் இணைப்பு பெட்டி


உறிஞ்சும்
குழாய்
மின்னோடி
இணைப்பி
உறிஞ்சும்
குழாய்
மின்னோடியின் மூடி
நிறுத்த / இயக்க
இணைப்பி
மின்னோடி
உறிஞ்சும்
குழாய்
வடிகட்டும் பை
வடிகட்டி
சக்தி நாடா
தூசு தட்டும் பட்டை


கைப்பிடி
மின்வடம்
வடிகட்டும் பை
உறிஞ்சும்
குழாய்
வடிகட்டும் பையின் மூடி
விசிறி
மின்னோடி

திறந்த மற்றும் குறைச்சுற்று சோதனை



நில இணைப்புச் சோதனை



	திறந்த சுற்று	குறுக்குச் சுற்று	நில இணைப்பு பழுது
சோதனை விளக்கு	பிரகாசமாக எரிதல்/ எரியாமை	பிரகாசம்/ மங்கல்	பிரகாசமாக எரிதல்/ எரியாமை
பழுது	பழுது / இல்லை	பழுது / இல்லை	பழுது / இல்லை

பிரித்தல்

1) வெற்றிட துப்புரவிை ய கவிழ்த்து வைக்கவும்.

2) அடிபுற மரையாணிகளை கழற்றவும்

3) அடிபுற மூடியை அகற்றவும்.

4) உறிஞ்சும் குழாயை அகற்றவும்.

5) வடிகட்டும் பையை அகற்றவும்.

சோதனை

வெற்றிட துப்புரவியை பிரித்த பின் உறிஞ்சும் குழாய், வெற்றிட வடிகட்டி, மின்னோடியின் சக்தி மாற்று கயிறு ஆகியவற்றை சோதனை செய்ய வேண்டும். உறிஞ்சும் குழாயில் ஏதாவது அடைப்பு ஏற்பட்டிருந்தால் அடைப்பை நீக்கவும். வடிகட்டி பழுதடைந்திருந்தால் புதிய வடிகட்டி மாற்றவும். அதே போன்று துண்டித்து அல்லது அறுந்துபோன சக்தி மாற்று கயிறு மாற்றாக புதிய கயிற்றை மாற்றவும்.

சில நேரங்களில் மூடி அல்லது நூல் போன்றவை துருத்தியில் சிக்கி கொண்டிருக்கும். அவற்றை கத்திரிக்கோலினால் வெட்டி எடுக்கவும். துருத்தி இலகுவாக சுழலுவதை உறுதி செய்யவும்.

மின்சக்தி கிடைக்கவில்லை எனில் மின் இணைப்பு வடத்தில் மின் தொடர் சோதனை செய்யவும் பழுது என்றால் புதிய மின் இணைப்பு வடத்தை பொருத்தவும்.

மின்னோடி எரிந்த நிலையில் இருந்தாலும் மின்சக்தி இருக்காது. அவ்வாறான சூழ்நிலையில் புதிய வைண்டிங் சுற்றவும். இல்லை எனில் அதே சக்தி மற்றும் அளவுடைய மின்னோடியை மாற்றவும்.

மீண்டும் இணைத்தல்

1) புதிய வடிகட்டும் பையை பொருத்தவும்.

2) உறிஞ்சும் பகுதியில் உறிஞ்சும் குழாயை பொருத்தவும்.

3) அடிமூடியை சரியாக பொருத்தவும்.

4) துப்புரவியை நேராக வைக்கவும்.

இணைத்தபின் சோதனை

மின் இணைப்பு வடத்தில் திறந்த சுற்று, குறுக்கு சுற்று, நில இணைப்பு சோதனை செய்யவும் சரியாக இருந்தால் துப்புரவியை இயக்கவும்.

துப்புரவியை சரியாக துப்புரவு பணி செய்கின்றதா என சோதிக்கவும்

முன்னெச்சரிக்கை

பிரித்தல், இணைத்தல் மற்றும் சோதித்தல் ஆகியவற்றை உரிய மரப்பலகைகள் மீது வைத்து செய்யவும்.

நட்டுகள், போல்டுகள், சிறு உதிரி பாகங்கள் ஆகியவற்றை கழற்றி சிறு தட்டு, அல்லது கிண்ணங்களில் பாதுகாப்பாக வைக்கவும்.

உறைத்தாங்கிக்கு கிரீஸ் இடக்கூடாது. உயவு எண்ணையிடவும். கோளத் தாங்கிகளுக்கு கிரீஸ் இடவும்.

வெற்றிடத் துப்புரவியின் இணைப்பு சக்திமாற்று நாடாவை கவனமாக கையாளவும். அவற்றில் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் புதிதாக மாற்றவும். மாற்று வழியை கையாளக்கூடாது.